T·C-027

074/DD/23

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours　　　　Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

2. ஆண்டுதோறும் எந்நாளை உலகக் காற்று நாளாகக் கொண்டாடுகிறோம்? உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

3. ‘பல்லார்’, ‘முயற்சி ’ எனத் தொடங்கும் குறட்பாக்களை எழுதுக.

4. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பெழுதுக :

(அ) ஆடுக

(ஆ) பயில்தொழில்

(இ) கைதொழுது

(ஈ) உரைத்தல்

[Turn over

6. பகுபத உறுப்பிலக்கணம் தருக :

(அ) வருக

(ஆ) கிளர்ந்த

7. நான்கனுக்குப் பொருள் தருக :

(அ) தண்பெயல்

(ஆ) முனிவு

(இ) பண்டி

(ஈ) ஓசுநர்

8. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஒருவன் இருக்கிறான் | - | சா. கந்தசாமி |
| (ஆ) | பாய்ச்சல் | - | கி. ராஜநாராயணன் |
| (இ) | புதிய நம்பிக்கை | - | கு. அழகிரிசாமி |
| (ஈ) | கோபல்லபுரத்து மக்கள் | - | கமலாலயன் |

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. 'அருளைப்' எனத் தொடங்கும் நீதிவெண்பாப்பாடலை எழுதுக.

2. உங்களுக்குத் தெரிந்த மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

3. நீவிர் அறிந்த நிகழ்கலைகள் ஆறனைப் பட்டியலிடுக.

4. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

5. "வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

(அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

(ஆ) இவ்வடிகளை இயற்றியவர் யார்?

(இ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

(ஈ) எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

(உ) காருகர் - பொருள் தருக.

(ஊ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

6. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

- அலகிட்டு வாய்பாடு எழுதுக.

7. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

(அ) தாமரை இலை நீர்போல

(ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல

(இ) கண்ணினைக் காக்கும் இமைபோல

## பகுதி – III

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**(4 × 10 = 40)**

1. 'தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு' குறித்து, நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

2. 'பொருள் செயல் வகை' என்னும் அதிகாரத்தின் வாயிலாக திருவள்ளுவர் குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

3. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

4. தன்னால் எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை அறிந்து புது உண்மைகளைச் சொன்ன ஸ்டீபன் ஹாக்கிங் குறித்து நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

5. எண் வகை விடைகளைச் சான்றுடன் விளக்குக.